099067

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

33 T I

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

ඉතිහාසය I
வரலாறு I
History I

පැය එකයි
ஒரு மணித்தியாலம்
One hour

கவனிக்க:

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ் வினாத்தாளுக்கு **80** புள்ளிகள் வழங்கப்படும்.

(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை உரிய வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**

(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

1. கி.பி. நான்காம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டமை, தகவல்கள் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளமை, இந்நாட்டின் பழமையான வம்சக் கதையாக அமைந்துள்ளமை போன்ற விடயங்கள் எந்த மூலாதாரத்துடன் தொடர்புடையவை?
(1) மகாவம்சம் (2) தீபவம்சம் (3) தாதாவம்சம் (4) போதிவம்சம்

2. இந்நாட்டின் பௌத்த சாசன வரலாற்றிற்கு முதலிடம் வழங்கி எழுதப்பட்டுள்ள நூலானது
(1) ராஜாவலிய (2) ராஜரத்னாகரய (3) நிக்காய சங்கிரக (4) வினயட்டகத்தாவ

3. பெறுமதி வாய்ந்த வரலாற்று மூலாதாரமாகக் கருதப்படும் கல்வெட்டுகள் தொடர்பில் **பொருத்தமற்ற** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சம்பவங்களுக்கு சமகாலத்தவையாகும்.
(2) வம்சக் கதைகளில் காணப்படும் தகவல்களை உறுதிப்படுத்துவதற்கு உதவுபவையாகும்.
(3) தொடர்ச்சியான அரசியல் வரலாற்றைக் கட்டியெழுப்புவதற்குப் பயன்படுத்தலாம்.
(4) சிங்கள எழுத்துக்களின் பரிணாமத்தை அறிந்து கொள்ளப் பயன்படும்.

4. புளத்சிங்கள, குருவிட்ட போன்ற பிரதேசங்களில் அமைந்துள்ள குகைகளின் முக்கியத்துவம் யாதெனில், அவை
(1) அனுராதபுரம், பொலன்னறுவை காலப்பகுதிகளின் பாதுகாப்பு நிலையமாக விளங்கியமை
(2) புராதன பௌத்த துறவி மடமாகக் (ஆராமய) காணப்பட்டமை
(3) கல்வெட்டுகளில் எழுதுவதற்கு பிராமி எழுத்துக்களைப் பயன்படுத்தியமை
(4) வரலாற்றுக்கு முற்பட்ட மனிதனின் வாழ்க்கைத் தகவல்களுக்குரித்தான காரணிகள் கிடைக்கப் பெற்றமை

5. பின்வரும் நபர்களில் இலங்கைக்கு வருகை தந்து, தகவல்களைச் சேகரித்து, அறிக்கைகளைத் தயாரித்தோரைக் கொண்டுள்ள விடை எது?

A – மெகஸ்தினிஸ் B – பாகியன் தேரர்
C – தொலமி D – இபன் பதூதா
E – றொபட் நொக்ஸ் F – ஹியுங் சாங்

(1) B, D, F (2) C, D, E (3) B, D, E (4) A, B, D

6. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் இலங்கையின் அரச குடும்பப் பெண்களின் ஆடையணிகலன்கள் மற்றும் அழகுக்கலை பற்றி விளங்கிக் கொள்வதற்குப் பயன்படுவன யாவை?
(1) சீகிரியா சுவர்களில் வரையப்பட்டுள்ள பெண்களின் உருவங்கள்
(2) தொல்பொருள் அகழ்வாராய்ச்சியின் போது கிடைக்கப்பெற்ற ஆபரணப் பகுதிகள்
(3) பொலன்னறுவை திவங்க படிமனையில் வரையப்பட்டுள்ள படக்குறிப்புகள்
(4) கண்டி தலதா மாளிகையிலுள்ள ஓவியங்கள்

7. இலங்கையின் முன் வரலாற்றுக் காலப்பகுதிக்குரிய முக்கிய சம்பவமாக அமைவது
(1) மட்பாண்டங்களைப் பயன்படுத்தத் தொடங்கியமை
(2) படிகம் மற்றும் மஞ்சள் நிறக் கற்களைப் பயன்படுத்தி கல்லாயுதங்கள் தயாரிக்கப்பட்டமை
(3) தாவரங்களையும் விலங்குகளையும் தீயில் சுட்டு உண்டமை
(4) நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டு இயற்கையான கற்குகைகளில் வாழ்ந்தமை


[பக். 2 ஐப் பார்க்க

8. இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்பே இந்நாட்டு வாசிகள் தகனத்திற்கு ஒட்சிசன் வாயு அவசியமென்பதை அறிந்திருந்தமைக்கான உதாரணமாக முன்வைக்கத்தக்கது,
(1) கித்துல்கலயிலுள்ள பெலிலேன எனுமிடத்தில் கண்டெடுக்கப்பட்ட சுடப்பட்ட காட்டு ஈரப்பலா விதைகள்
(2) சுடப்பட்டு வர்ணம் பூசப்பட்ட மட்பாத்திரங்கள்
(3) உடரஞ்சா மடத்தில் கண்டெடுக்கப்பட்ட வீட்டு இடிபாடுகளிலுள்ள சுடப்பட்ட மட்பாண்டப் பகுதிகள்
(4) தீவின் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் கண்டெடுக்கப்பட்டுள்ள களி மண்ணினாலான ஓடம் போன்ற மயானங்கள்

9. இறந்த உடல்களை உக்கிப்போகும் வரை புதைத்து, பின்னர் அவற்றைத் தோண்டியெடுத்து மண்டையோட்டை ஒப்பமிடல், செந்நிறமான கற்களால் நிறம் பூசுதல் போன்ற சடங்குகள் பற்றிய காரணிகள் பின்வரும் எக்காலப் பகுதிக்குரியவையாகும்?
(1) முன் வரலாற்றுக் காலம் (2) வரலாற்றுக்கு முற்பட்ட காலம்
(3) ஆரம்ப வரலாற்றுக் காலம் (4) வரலாற்றுக் காலம்

10. இலங்கையின் ஆரம்ப வரலாற்றுக் காலத்தில் குடியேற்றங்களின் பரம்பலானது நதிக்கரையோரங்களிற்கு வெளியே காணப்பட்டதாக நவீன தொல்பொருளியலாளர்கள் கருதுகின்றனர். மேற்படி கருத்தை உறுதிப்படுத்துவதற்கான நதிக்கரையாக அமைவது எது?
(1) கல்லோயா (2) கிரிந்தி ஓயா (3) மல்வத்து ஓயா (4) யான் ஓயா

● பின்வரும் உருவின் மூலம் குளத்தொகுதியொன்று காட்டப்பட்டுள்ளது. இதனையடிப்படையாகக் கொண்டு **11, 12** ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.



11. இவ்வாறான குளத்தொகுதி நிர்மாணத்தின் ஒரு நோக்கமாக அமைந்திருக்கக்கூடியது,
(1) நீரைப் பாதுகாத்தல்
(2) வெள்ள நீரைக் கட்டுப்படுத்தல்
(3) காலநிலையின் சமநிலையைப் பாதுகாத்தல்
(4) மண்ணரிப்பைத் தடுத்தல்

12. இது போன்ற குளத்தொகுதிகளைப் பரவலாகக் காணக்கிடைப்பது,
(1) ஈரவலயத்திலாகும். (2) உலர் வலயத்திலாகும்.
(3) மலைநாட்டு ஈரவலயத்திலாகும். (4) தாழ்நாட்டு இடைப்பட்ட ஈரவலயத்திலாகும்.

13. இலங்கை வரலாற்றில் முதன்முதலில் ஆற்றுக்குக் குறுக்காக அணைகட்டிய ஆட்சியாளனாகக் கருதப்படுபவன்,
(1) வசப மன்னன் (2) மகாசேன மன்னன் (3) முதலாம் அக்போ மன்னன் (4) இளநாக மன்னன்

14. திட்டமிடல், தொழினுட்பம், அலங்காரம் போன்ற விடயங்களில் இலங்கையின் மிகச்சிறந்த நகரப் பூங்காவாகக் கருதப்படுவது,
(1) மஹா மேகவனப் பூங்கா (2) தீப பூங்கா (3) சீகிரிய பூங்கா (4) ரன்மசு பூங்கா

15. விகாரை ஆராமைகளுக்குச் (துறவி மடங்களுக்குச்) செய்யப்படும் பூசைகள் பற்றிய தகவல்களடங்கிய கல்வெட்டுகளில் பல்வேறு குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் அன்னம் சித்திரிக்கும் குறியீட்டின் மூலம் உணர்த்தப்படுவது யாது?
(1) சௌபாக்கியம் (2) தூய்மை (3) பாதுகாப்பு (4) நிறைவு

16. பண்டைக் காலத்தில் வீதிகளின் நீளத்தைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட அளவையானது,
(1) கவ்வ (2) வியந்த (3) கரீசை (4) அங்குலம்

17. பின்வரும் நிரல் I இல் இலங்கையில் காணப்பட்ட கிராமிய குடியிருப்புக்கள் சில குறிப்பிடப்பட்டுள்ளதோடு நிரல் II ஆனது அவற்றின் பிரதான பொருளாதார நடவடிக்கைகளைக் குறிப்பிடுகிறது.

நிரல் I	நிரல் II
1. கசீகார கம	A - கடற்றொழில்
2. கோபால கம	B - மட்பாண்டம் வனைதல்
3. கேவட்ட கம	C - தச்சுக் கைத்தொழில்
	D - விவசாயம்
	E - விலங்கு வேளாண்மை

நிரல் I இற்கு அமைவாக நிரல் II ஐ ஒழுங்குபடுத்தும்போது பெறப்படும் சரியான விடை யாது?
(1) A, C, E (2) C, B, D (3) D, E, A (4) E, B, D

18. இலங்கை பல்லின, பன்மத, பல்கலாசார நாடாகக் காணப்படுவதில் செல்வாக்குச் செலுத்திய முக்கிய காரணி
(1) தீவாக அமைந்திருக்கின்றமை
(2) இயற்கை வளங்கள் நிறைந்த நாடாகக் காணப்படுகின்றமை
(3) வாய்ப்பான காலநிலையைக் கொண்ட நாடாகக் காணப்படுகின்றமை
(4) இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருக்கின்றமை

19. பின்வரும் அரசர்கள், அரசி ஆகியோருள் பொலன்னறுவை இராசதானிக்குரியவர்களை உள்ளடக்கிய தெரிவு யாது?
A – வங்கநாசிக திஸ்ஸ மன்னன் B – கல்யாணவதி அரசி
C – வசப மன்னன் D – நிஸ்ஸங்கமல்ல மன்னன்
E – மகாசேன மன்னன் F – சகாசமல்ல மன்னன்
(1) A, C, F (2) B, E, F (3) A, B, E (4) B, D, F

[பக். 3 ஐப் பார்க்க

20. பண்டைய சமூகத்தில் குற்றவாளியொருவர் ஊரில் மறைந்திருக்கும் வேளையில் அவரைப் பிடித்துக் கொடுக்கும் பொறுப்பு வழங்கப்பட்டிருந்தது,
(1) கமிக்கவுக்கு (2) ஊரிலுள்ள அனைவருக்கும்
(3) தசகம் ஏத்தன்டவுக்கு (தசகம மக்களுக்கு) (4) பருமகவுக்கு

21. கீழே A தொடக்கம் E வரை இலங்கையில் அதிகாரத்திற்கு வந்த மன்னர்கள் சிலர் அரசராவதற்கு முன்னர் பயன்படுத்திய பெயர்கள் காட்டப்பட்டுள்ளன.
A – சப்புமல் இளவரசன் B – முத்துசாமி இளவரசன்
C – டிக்கிரி இளவரசன் D – மஹா அஸ்தான இளவரசன்
E – கண்ணுசாமி இளவரசன்
இவற்றை வாசித்து **முதலாம் இராஜசிங்கன், ஆறாம் புவனேகபாகு** மற்றும் **ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்** போன்ற மன்னர்கள் பயன்படுத்திய பெயரை ஒழுங்குமுறையில் காண்பிக்கும் விடையைத் தெரிவுசெய்க.
(1) C, A, E (2) D, A, B (3) C, A, B (4) D, C, B

22. கம்பளை இராசதானிக் காலத்தில் அரசியல் துறையில் காணக்கூடிய சிறப்பியல்பு யாதெனில்,
(1) இந்து மற்றும் மஹாயான செல்வாக்கினால் சிலைமனைகளில் தேவாலயங்கள் அமைத்தல்
(2) தூது இலக்கியங்களைப் படைக்க ஆரம்பித்தல்
(3) தாய்வழி அரசுரிமை முறை ஆரம்பமாதல்
(4) அரசுரிமை ஒரே அரச குடும்பத்தின் தந்தையிலிருந்து - தனயன்மாருக்கு உரித்தாதல்

23. யாழ்ப்பாண அரசு வீழ்ச்சியடைதல் பற்றிய **பிழையான** கூற்றைத் தெரிவு செய்க.
(1) அரசுரிமையாளரிடையே உரிமைப் போராட்டங்கள் ஏற்பட்டமை
(2) யாழ்ப்பாண ஆட்சியாளருக்கு நிலையான படையொன்று காணப்படாமை
(3) இயற்கையரண்களாலான பாதுகாப்பின்மை
(4) யாழ்ப்பாணத்தின் பெரும்பான்மையான மக்கள் போர்த்துக்கேயருக்குச் சார்பாகவிருந்தமை

● பின்வரும் வரலாற்றுச் சம்பவங்களின் துணையுடன் **24, 25** ஆம் வினாக்களுக்கு விடை தருக.
A – தந்துரேப் போரில் போர்த்துக்கேயர் தோல்வியுறல்
B – குசுமாசன தேவி தோன கத்தரினா எனும் பெயரில் ஞானஸ்னானம் பெறல்
C – நாயக்கர் வம்சத்திற்கு கண்டி இராசதானியின் அரசுரிமை வசமாதல்
D – இந்நாட்டில் சீயம் நிக்காய ஆரம்பமாதல்

24. மேற்படி சம்பவங்களில் சரியான வரலாற்றொழுங்குமுறையைத் தருக.
(1) A, B, D, C (2) B, C, A, D (3) A, C, B, D (4) B, A, C, D

25. C எழுத்தினால் காண்பிக்கப்பட்டுள்ள வரலாற்று நிகழ்வுடன் தொடர்புடைய மன்னர் யார்?
(1) ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திரசிங்கன் (2) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்
(3) ஸ்ரீ விஜய இராஜசிங்கன் (4) இராஜாதி இராஜசிங்கன்

● பின்வரும் அட்டவணையில் A தொடக்கம் F வரையிலான தகவல்கள் மூலம் **26, 27** ஆம் வினாக்களுக்கு விடை தருக.

செல்வாக்குச் செலுத்திய காரணி	தலைவன்	ஆளுநர்
A - அரசின் வரிக்கொள்கை	C - கெப்பிற்றிபொல திசாவை	E - டொரிங்டன் பிரபு
B - அரசன் இல்லாமை பற்றிய வருந்துதல்	D - கொங்காலேகொட பண்டா	F - சேர் ரொபர்ட் பிரவுன்ட்றிக்

26. கி.பி 1818 ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்துடன் தொடர்படைய தகவல்களைக் காட்டும் விடை எது?
(1) A, C, E (2) B, C, F (3) A, D, F (4) B, D, E

27. கி.பி 1848 ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்துடன் தொடர்புடைய தகவல்களைக் காட்டும் விடை எது?
(1) A, D, E (2) B, D, E (3) A, C, F (4) B, C, F

28. 19 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் ஏற்பட்ட சமய மற்றும் கலாசார மறுமலர்ச்சியுடன் தொடர்பான கருத்துச் சோடிகள் சில பின்வருமாறு. இவற்றில் **பொருத்தமற்ற** சோடி எது?
(1) ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் அவர்கள் - பௌத்த பிரம்ம ஞான சங்கம் தாபிக்கப்படல்
(2) ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர் - பேலியகொட வித்யாலங்கார பிரிவேனா ஆரம்பிக்கப்படல்
(3) ஆறுமுக நாவலர் அவர்கள் - உதய பானு என்ற பத்திரிகை ஆரம்பிக்கப்படல்
(4) சித்திலெப்பை அவர்கள் - மரதானை சாஹிரா கல்லூரி ஆரம்பிக்கப்படல்

29. கீழே காட்டப்பட்டுள்ள இலங்கையில் பிரித்தானியராட்சியினால் ஏற்பட்ட சில மாற்றங்களில் கலாசார மாற்றங்கள் இரண்டைக் காட்டும் விடை எது?
A – தொழிலாளர் வகுப்பு உருவாதல்
B – மேலைத்தேய ஆடையணிகள், பழக்க வழக்கங்கள் இந்நாட்டின் சமூகத்துடன் கலத்தல்
C – மேலைத்தேய கல்வி பரவுதல்
D – வேதனத்திற்காக வேலைசெய்யும் ஊழியப் படையொன்று உருவாதல்
E – தொழிற்சங்கங்கள் தாபிக்கப்படல்
(1) B, C (2) C, D (3) B, E (4) C, E

[பக். 4 ஐப் பார்க்க

30. இலங்கை தேசிய சங்கத்தின் முதலாவது தலைவராகப் பதவி வகித்தவர் யார்?
(1) சேர். டீ. பீ. ஜயதிலக்க அவர்கள் (2) பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள்
(3) எப். ஆர். சேனாநாயக்க அவர்கள் (4) பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள்

31. 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்கிணங்க தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயமொன்று தொடர்பில் தீர்மானமெடுக்கப் பின்பற்றக்கூடிய ஜனநாயக வழிமுறை எது?
(1) பாராளுமன்றத்தில் விவாதம் நடாத்துதல் (2) உயர்நீதிமன்றத்தில் முன்வைத்து தீர்ப்பை பெறல்
(3) பொதுசன அபிப்பிராயத் தேர்தல் நடாத்துதல் (4) நாட்டிலுள்ள கல்விமான்களின் கருத்துக்களைக் கேட்டறிதல்

● பின்வரும் A, B என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு **32, 33** ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.

A – டெனிஸ் மைதான உறுதிமொழி
B – சரஜிவோ நிகழ்வு

32. பிரெஞ்சுப் புரட்சியுடன் தொடர்பானது,
(1) A, B உண்மையற்றது (2) A, B உண்மையானது
(3) A உண்மையானது என்பதுடன் B உண்மையற்றது (4) A உண்மையற்றது என்பதுடன் B உண்மையானது

33. முதலாம் உலக மகா யுத்தத்துடன் தொடர்பானது,
(1) A, B உண்மையற்றது (2) A, B உண்மையானது
(3) A உண்மையானது என்பதுடன் B உண்மையற்றது (4) A உண்மையற்றது என்பதுடன் B உண்மையானது

● பின்வரும் A, B, C, D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள கூற்றுகள் / பதங்களைக் கருத்திற் கொண்டு **34** தொடக்கம் **36** வரையிலான வினாக்களுக்கு விடை தருக.

A – 1. கடலோடி ஹென்ரி
2. நாடுகாண் பயணம்

B –1. இரண்டாம் உலக மகாயுத்தம்
2. சர்வதேச சங்கம்

C – 1. கொன்ஸ்தாந்திநோபிளை துருக்கியர் கைப்பற்றுதல்
2. மறுமலர்ச்சி தொடங்குதல்

D –1. உலகம் பற்றிய புதிய கண்டுபிடிப்புக்கள்
2. விஞ்ஞான முன்னேற்றம்

34. முதலாவதின் அனுசரணையின் காரணமாக இரண்டாவது வெற்றிபெற்றமை தொடர்பான கூற்றுச் / பதச் சோடி எது?
(1) A (2) B (3) C (4) D

35. முதலாவதிற்கும் இரண்டாவதிற்குமிடையே **தொடர்பின்மையைக்** காட்டும் கூற்றுச் / பதச் சோடி எது?
(1) A (2) B (3) C (4) D

36. முதலாவது இரண்டாவதின் வளர்ச்சிக்கு ஏதுவாயமைவதைக் காட்டும் கூற்றுச் / பதச் சோடி யாது?
(1) A (2) B (3) C (4) D

● உலகின் முக்கிய புரட்சிகளுடன் தொடர்பான தகவல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் **37, 38** ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A - சமாதானம், காணி மற்றும் உணவு
B - ஸ்டேட் ஜெனரல் சபை
C - பிரதிநிதித்துவமின்றேல் வரியில்லை
D - பஸ்டீல் சிறைச்சாலை தாக்கப்படல்

37. ரஷ்யப் புரட்சியின் தாரக மந்திரமானது
(1) A ஆகும். (2) B ஆகும். (3) C ஆகும். (4) D ஆகும்.

38. அமெரிக்க சுதந்திரப் போருடன் தொடர்பான தகவலானது,
(1) A ஆகும். (2) B ஆகும். (3) C ஆகும். (4) D ஆகும்.

39. கீழே தரப்பட்ட கடமைகளுடன் தொடர்புடைய ஐக்கிய நாடுகளின் நிறுவனம் யாது?
● பாதுகாப்புச்சபையின் சிபாரிசுடன் பொதுச் செயலாளரை நியமித்தல்
● சர்வதேச நீதிமன்றத்தின் நீதிபதிகளை நியமித்தல்
● புதிய உறுப்பினர்களை நிறுவனத்திற்குச் சேர்த்தல்
(1) பொதுச்சபை (2) நம்பிக்கைப் பொறுப்புச் சபை
(3) சமூகப் பொருளாதார சபை (4) செயலகம்

40. அமெரிக்கா அல்லது ரஷ்ய முகாமைச் சாராது நடுநிலையான அமைப்பொன்றை நிறுவுவதற்கு முயற்சிகளை மேற்கொண்ட தெற்காசிய தலைவர் யார்?
(1) ஜவஹர்லால் நேரு (2) எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டார நாயக்க
(3) அப்துல் கமல் நசார் (4) மார்ஷல் டிட்டோ

* * *

098067

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

33 T II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

ඉතිහාසය II
வரலாறு II
History II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

※ பகுதி **I** இன் வினா இலக்கம் **1** கட்டாயமானது.
※ பகுதி **II** இலிருந்து **நான்கு** வினாக்களுக்கும் பகுதி **III** இலிருந்து **ஒரு** வினாவுக்கும் விடை எழுதுக.
※ எல்லாமாக **ஆறு** வினாக்களுக்கு விடை எழுதுக.

பகுதி I

1. (அ) கீழே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் **அனைத்தையும்** தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்திலும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் **அனைத்தையும்** தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப்படப் பகுதியிலும் குறித்துப் பெயரிடுக.

(i) கிரிந்தி ஓயா, இரணைமடுக் குளம், தேவநகரம், சல்வத்தொட்ட, கந்தரோடை (கந்துருகொட), சொரபொர வாவி, கன்னொருவை, ஸ்ரீ ஜயவர்த்தனபுரக் கோட்டை, கலா ஓயா, பெட்ரிக் கோட்டை, பொம்பரிப்பு, காலித் துறைமுகம் (12 புள்ளிகள்)

(ii) மும்பை (பம்பாய்), செங்கடல், உரோமாபுரி, மலாயா தீபகற்பம், யப்பான் தீவுகள், போர்த்துக்கல் (06 புள்ளிகள்)

(ஆ) (i) கீழே *A*, *B*, *C* மற்றும் *D* ஆகியவற்றில் தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களுக்குரிய விடைகளை ஒழுங்குமுறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A - ஐரோப்பியரின் வருகைக்கு முன்னர் இந்து சமுத்திரத்தின் வர்த்தகத்தில் ஆதிக்கம் செலுத்திய இனம்
B - போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து விரட்டுவதற்கு கடற்படைப் பலமுள்ள வெளிநாட்டு இனத்தவரின் உதவியைப் பெற்றுக் கொண்ட மலைநாட்டு மன்னர்
C - கல்பொத்த கல்வெட்டைச் செதுக்கிய பொலன்னறுவை ஆட்சியாளர்
D - இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது முதலாவது அணுகுண்டுத் தாக்குதலுக்குட்பட்ட நகரம் (04 புள்ளிகள்)


● *A* மற்றும் *B* இனால் கீழ் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து, தரப்பட்ட வினாக்களுக்கான விடைகளை இலக்கங்களின் ஒழுங்குமுறையில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.



A

(ii) 1. '*A*' இனால் காட்டப்படும் நிர்மாணிப்பு எது?
2. இதன்மூலம் ஆற்றப்படும் பணி யாது?
3. இதனை எந்த நீர்ப்பாசனக் கட்டுமானத்தை அண்மியதாகக் காணலாம்?
4. இதனை நிர்மாணிப்பதற்குப் பயன்படுத்திய பொருட்களிலொன்றைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)



B

(iii) 1. '*B*' எழுத்தினால் காட்டப்படுவது எது?
2. இது அமைந்துள்ள நகரம் எது?
3. இதனை யாரைத் தங்கவைப்பதற்காகப் பயன்படுத்தினர்?
4. இது உலகின் எந்தப் புரட்சியுடன் தொடர்புபட்டது?

(04 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க.

பகுதி II

2. (i) இலங்கையின் தென்மாகாணத்திற்குரிய குறைவரல் வலயத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட கல்லாயுதங்கள் கிடைக்கப்பெற்றுள்ள இடங்கள் **மூன்றைப்** பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் வாழ்க்கை முறையின் முக்கியமான பண்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) (a) முன் வரலாற்றுக் காலம் எனக் கருதப்படுவது எந்தக் காலப்பகுதியாகும்?

(b) இலங்கையின் முன் வரலாற்றுக் காலத்திற்குரிய மயானங்கள் அமைந்துள்ள இடங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(iv) முன் வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்த மனிதன் தொழினுட்பத்தைப் பயன்படுத்திய விதத்தை **மூன்று** காரணிகளை முன்வைத்து விளக்குக. (06 புள்ளிகள்)

3. (i) இலங்கையின் அதிகாரம் மையப்படுத்தப்பட்ட நிருவாகத்திற்குரித்தான பின்வரும் பணிகளையும் அப்பணிகளுடன் தொடர்புடைய நபர்களின் உத்தியோகபூர்வப் பெயர்களையும் அடைப்புக்குறிக்குள்ளிருந்து தெரிவுசெய்து ஒழுங்குமுறைப்படி எழுதுக.

A - காசு அச்சிடும் பிரிவின் தலைவர்

B - குதிரைப் பிரிவின் தலைவர்

C - வர்த்தக நடவடிக்கைகளுக்கான தலைவர்

(ரூப அதெக, பன அதெக, நகர வுடிக, நட்ட அதெக, அச அதெக) (03 புள்ளிகள்)

(ii) பின்வரும் விடயங்கள் ஒவ்வொன்றுடனும் தொடர்புடைய ஆட்சியாளர்கள் யார் என்பதை ஒழுங்குமுறைப்படி எழுதுக.

A - தனது மாமன்மாரை வென்று அரச பதவியைக் கைப்பற்றுதல்

B - இலங்கையின் வரலாற்றில் முதற்றடவையாக ஒழுங்கமைக்கப்பட்ட யுத்தத்தில் வெற்றிபெற்று ஐக்கிய இலங்கையை உருவாக்குதல்

C - அதிகளவு குளங்களை நிர்மாணித்தலில் முன்னிலை வகித்தல்

D - பாண்டிய வம்சத்தின் உதவியுடன் பொலன்னறுவையில் மூன்று முறை அதிகாரத்திற்கு வந்த அரசியாதல் (04 புள்ளிகள்)

(iii) புராதன இலங்கையில் கிராமங்கள் நிருவகிக்கப்பட்ட விதத்தை அவற்றின் தலைமைத்துவம் மற்றும் பணிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) புராதன இலங்கையின் பொருளாதாரத்தில் தேசிய மற்றும் வெளிநாட்டு வர்த்தகம் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தமை பற்றி **மூன்று** காரணிகளை முன்வைத்து விளக்குக. (06 புள்ளிகள்)

4. (i) அனுராதபுர காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட பெரிய குளங்கள் **மூன்றைப்** பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) பின்வரும் *A*, *B*, *C* மற்றும் *D* எழுத்துக்களின் மூலம் தரப்பட்டுள்ள பண்டைய தொழினுட்பம் மற்றும் அதனுடன் தொடர்பான நிர்மாணிப்புகள் யாவை என்பதை அடைப்புக்குறிக்குள்ளிருந்து தெரிவுசெய்து ஒழுங்குமுறைப்படி எழுதுக.

A - வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் தமது வேலைகளைச் செய்வதற்குப் பயன்படுத்திய தொழினுட்பக் கருவிகள் அழைக்கப்படும் பெயர்

B - மண்பானைகளைத் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட தொழினுட்ப உபகரணம்

C - நீர் அமுக்கத்தைச் சமநிலைப்படுத்தி வாய்க்காலுக்கு நீரை விடுவிக்கப் பயன்படுத்திய தொழினுட்ப நிர்மாணிப்பு

D - நீர்நிலையியல் கோட்பாட்டைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட நிர்மாணிப்பு

(அலைதாங்கி, மடைக் கதவு, வில்லும் அம்பும், வனைதற் சில்லு, கல்லாயுதங்கள், தெடிகம யானை விளக்கு, வான்கதவு, கற்பீலிகள்) (04 புள்ளிகள்)

(iii) பண்டைய ஆட்சியாளர்கள் பாரியளவு குளங்களைக் கட்டும்போது எதிர்பார்த்த நோக்கங்கள் **இரண்டைச்** சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) (a) பண்டைய இலங்கையில் வளர்ச்சியடைந்த இரும்பு பிரித்தெடுக்கும் தொழினுட்பம் காணப்பட்டதாக தொல்பொருளியல் சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ள **இரண்டு** இடங்களைக் குறிப்பிடுக.

(b) அவ்விடத்தில் இரும்பு பிரித்தெடுக்கப்பட்ட விதத்தைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (06 புள்ளிகள்)

5. (i) இலங்கையின் முதலாவது நகரமயமாக்கல் கட்டத்திற்குரிய பண்டைய நிருவாக நகரங்கள் **மூன்றைப்** பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) முதலாவது நகரமயமாக்கல் கட்டத்திற்குரிய பண்டைய நகர நிருவாகத்தில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் **நான்கைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) தம்பதெனியா இராசதானியை ஆட்சி செய்த இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தின் முக்கியத்துவத்தை **இரண்டு** காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) இரண்டாவது நகரமயமாக்கல் கட்டத்தின்போது இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்பிலேற்பட்ட மாற்றங்கள் **மூன்றை** உதாரணங்களுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

[பக். 3 ஐப் பார்க்க.

6. (i) மலைநாட்டு இராசதானியின் தலைநகரமாக விளங்கிய கண்டியின் பாதுகாப்புடன் தொடர்புடைய முக்கியமான
(a) ஆறு
(b) கணவாய்கள் **இரண்டு**
என்பவற்றை ஒழுங்குமுறையில் எழுதுக. (03 புள்ளிகள்)

(ii) பின்வரும் தகவல்களுடன் தொடர்புடைய நபர்கள் யாவர் என்பதை ஒழுங்குமுறைப்படி குறிப்பிடுக.
A - சீதாவாக்கை இராஜசிங்க மன்னன் கண்டி இராச்சியத்தை ஆக்கிரமித்த போது அங்கிருந்த ஆட்சியாளன்
B - புதிய அரச வம்சத்தை தொடங்கிய கண்டி இராச்சிய ஆட்சியாளன்
C - கி.பி.1602 இல் கண்டிக்கு வருகை தந்த ஒல்லாந்து தூதுக்குழுவின் தலைவர்
D - கி.பி.1766 இல் ஒல்லாந்தருடன் ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்ட கண்டி இராச்சிய ஆட்சியாளன்
(04 புள்ளிகள்)

(iii) கண்டி இராசதானியின் பிராந்திய நிருவாகம் ஒழுங்கமைந்திருந்த விதத்தை **இரண்டு** காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) கண்டி இராசதானியின் சமூக அமைப்பில் பிரதானமாகப் புலப்படும் பண்புகளை **மூன்று** உதாரணங்களைக் குறிப்பிட்டு விவரிக்குக. (06 புள்ளிகள்)

7. (i) பின்வரும் அரசியல் மாற்றங்கள் ஒவ்வொன்றும் எந்த அரசியலமைப்புச் சீர்த்திருத்தங்களின் கீழ் இடம்பெற்றதென்பதை அடைப்புக்குறிக்குள்ளிருந்து தெரிந்தெடுத்து *A*, *B* மற்றும் *C* ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.
A - சட்டத்துறைக்கு முதன்முதலில் வரையறுக்கப்பட்ட வாக்குரிமையடிப்படையில் பிரதிநிதிகளைத் தெரிவு செய்தல்
B - உறுப்பினர்கள் 61 பேரைக் கொண்ட அரசுக் கழகத்தை தாபித்தல்
C - உறுப்பினர்கள் 30 பேரடங்கிய செனட்சபை(மூதவை) தாபிக்கப்படல்
(கி.பி. 1833-கோல்புறூக், கி.பி. 1910-குறுமக்கலம், கி.பி. 1931-டொனமூர், கி.பி. 1947-சோல்பரி) (03 புள்ளிகள்)

(ii) 1833 கோல்புறூக் சீர்த்திருத்தங்களின் மூலம் ஏற்பட்ட நிருவாக மாற்றங்கள் **இரண்டையும்**,. பொருளாதார மாற்றங்கள் **இரண்டையும்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) பிரித்தானியராட்சியினால் இந்நாட்டிலேற்பட்ட சமூக மாற்றங்கள் **இரண்டைச்** சுருக்கமாக விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) சுதந்திரத்தின் பின்னரான இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட பல்நோக்கு அபிவிருத்தித் திட்டங்கள் **இரண்டைக்** குறிப்பிட்டு, அவை இந்நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்த விதத்தை **இரண்டு** காரணிகளை முன்வைத்து விளக்குக. (06 புள்ளிகள்)

பகுதி III

8. (i) பிரித்தானியாவில் கைத்தொழிற்புரட்சியானது மூன்று பிரதான கைத்தொழில்களை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பித்தது. அக் கைத்தொழில்களைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) கைத்தொழிற் புரட்சியின் போது (*A*) தொடர்பாடல் மற்றும் (*B*) போக்குவரத்து துறைகளிலேற்பட்ட புதிய உற்பத்திகள் **இரண்டு** வீதம் ஒழுங்குமுறைப்படி குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) கைத்தொழிற் புரட்சியின் விளைவாக உலக சமூகத்திலேற்பட்ட மாற்றங்கள் **இரண்டை** விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) கைத்தொழிற் புரட்சி இலங்கை மீது செல்வாக்குச் செலுத்திய விதத்தை **மூன்று** உதாரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக. (06 புள்ளிகள்)

9. (i) முதலாம் உலக மகா யுத்தத்தின் போது காணப்பட்ட நேச(நட்பு) அணிக்குரிய நாடுகள் **மூன்றைப்** பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) பின்வரும் தகவல்களுக்குரிய விடைகளை ஒழுங்குமுறைப்படி தருக.
A - முதலாம் உலக மகா யுத்தத்தின் போது அமெரிக்காவிலிருந்த ஜனாதிபதி
B - இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது யப்பானிய தாக்குதலுக்குட்பட்ட அமெரிக்கத் துறைமுகம்
C - இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது ஜேர்மன் வதை முகாம்களில் கொல்லப்பட்ட இனம்
D - அடோல்ப் ஹிட்லரின் இரகசிய பொலிஸாரைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்ட பெயர் (04 புள்ளிகள்)

(iii) இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கு ஏதுவாயமைந்த காரணிகள் **இரண்டைச்** சுருக்கமாக விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) இரண்டாம் உலக மகா யுத்தத்தினால் பேரழிவுகள் ஏற்பட்டமையை **மூன்று** காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக. (06 புள்ளிகள்)

* * *

Department of Examinations Sri Lanka

99065

OL/2017/33/STE-II (NEW)

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka


33 STE II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

ඉතිහාසය II
வரலாறு II
History II

1. (අ) (i)
1. (அ) (i)
1. (a) (i)

විභාග අංකය
சுட்டெண்
Index No. ....



1. (අ) (ii)
1. (அ) (ii)
1. (a) (ii)

